மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 54, மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

54—

கணினி வடிவமைப்பு மையம்

***57073—திரு. ர.ம. பாபு முருகவேல்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணியில் பட்டு நெசவில் புதுமையுடன் புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்த கணினி வடிவமைப்பு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மேற்கொண்ட சீரிய நடவடிக்கைகளின் காரணமாக, விரிவான கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஆரணி பகுதியில் செயல்படும் பட்டு கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் வளர்ச்சிக்காக மேற்கு ஆரணி வட்டார கைத்தறி குழுமம் (West Aarani Block Level Handloom Cluster) *ரூபாய் ஒரு கோடியே 47 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின்கீழ் புதிய வடிவமைப்புகள் உருவாக்குவதற்காக, ரூபாய் 15 இலட்சம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி தனியாக வடிவமைப்பு செய்யக்கூடிய ஒரு அமைப்பு அங்கே அமைப்பதற்கு அவசியம் ஏற்படவில்லை என்பதைத் தங்கள்வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.*

2016 பிப்ரவரி 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.*

திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணியிலே அன்னை அஞ்சுகம் பட்டு கூட்டுறவுச் சங்கம், ஆரணி பட்டு நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம் என இரண்டு கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அங்கு தயாரிக்கப்படக்கூடிய பட்டுச் சேலைகளானது புதிய இரகமாகவும், புதிய வடிவமைப்போடும் திகழ்கின்றன. தமிழக அரசு மட்டுமல்லாமல், இந்திய அரசு அளவிலே பரிசுகளை வாங்கக்கூடிய அளவிற்கு அங்கே புதிய இரகங்களை தயாரித்துக்கொண்டிருந்தார்கள். ஆனால், கடந்த ஐந்தாண்டுகளாக வடிவமைப்பாளர் என்ற பதவி இரண்டு பட்டு கூட்டுறவுச் சங்கங்களிலும் இல்லை. இருந்தவர்களும் பணி ஓய்வுப் பெற்றுவிட்டார்கள். எனவே, புதியதாக அங்கே வடிவமைப்பாளர்களை நியமித்து, புதிய வடிவமைப்பிலே பட்டுச் சேலைகளை உற்பத்தி செய்ய வேண்டும். காரணம், இன்றைக்கு காஞ்சிபுரத்திற்குக்கூட ஆரணியில் இருந்துதான் பட்டுச் சேலைகள் நெய்து அனுப்பக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதன்மூலமாக அரசுக்கும் வருவாய் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அண்ணா பட்டு கூட்டுறவுச் சங்கத்திற்கும், அன்னை அஞ்சுகம் பட்டு கூட்டுறவுச் சங்கத்திற்கும் இந்த பெயர்கள் இருக்கின்ற காரணத்தினால், இந்த அரசு கண்டுக்கொள்ளவில்லையா, இல்லை என்ன காரணமென்பதைத் தெரியபடுத்த வேண்டும். புதிய வடிவமைப்பாளர்களை அங்கே நியமிக்க வேண்டுமென்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் தொகுதிக்கு வடிவமைப்பாளர்கள் வேண்டும், புதிய இரகம் உற்பத்தி செய்வதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேள்விகளை எழுப்பலாம். பெயரை வைத்து கண்டுக்கொள்ளவில்லையா என்றால், இந்த ஐந்தாண்டுக் கால ஆட்சியிலே, ஏற்கெனவே கடந்த ஆட்சியால் அமைக்கப்பட்ட அந்தக் கூட்டுறவுச் சங்கம் அதே பெயரிலேயே தொடர்ச்சியாக இந்த ஐந்தாண்டுகள் இயங்கி வருகிறது. அதை அரசு, எந்தவகையிலும் தொந்தரவு செய்யவில்லை என்பதை மாண்புமிகு*

உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) கூட்டுறவுத் தேர்தல் என்பதே அம்மா அவர்களின் ஆட்சியில்தான் ஜனநாயக முறைப்படி நடைபெற்று வந்தது. அங்கே உள்ள அனைவரும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமல்ல, பொதுமக்களும், நெசவாளர்களும் இருந்த அந்த நேரத்திலே அரசும், அங்கே உள்ள உறுப்பினர்களும், நாங்களும் நினைத்திருந்தால் பெயரை மாற்றியிருக்கலாம். ஆனால், ஐந்தாண்டுக் காலத்திலே அதுபோன்ற நடவடிக்கைகளை அரசு எடுக்கவில்லை என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நுணுக்கமாகக் கேள்வி கேட்கக்கூடிய ஒரு வழக்கறிஞர். இதை முதலிலே தெரிந்துகொள்ளும்படி நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். எப்பொழுது எடுத்தாலும் அரசை குற்றம்சாட்டுவதே உங்களுடைய வேலையாக இருக்கிறது. நீங்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணி வைத்த காரணத்தினால்தான் இந்த அவையிலே உறுப்பினர்களாக இருக்கிறீர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் (குறுக்கீடுகள்)

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சந்திரகுமார், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் ஒரு குற்றச்சாட்டு சொன்னார். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றார்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் இதையெல்லாம் பேசக் கூடாது, நீங்கள் பேசக் கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, அவர் கேள்வி நேரத்தில் ஒரு குற்றச்சாட்டு சொன்னார், அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி இருக்கின்றார்கள். அவ்வளவுதான். மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். குற்றஞ்சாட்டிப் பேசியதே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்தான். அவர் கேள்விமட்டும் கேட்கவில்லை, அவர் தேவையில்லாமல் அன்னை அஞ்சுகம் என்ற பெயர் இருப்பதால்தான் அரசு கண்டுகொள்ளவில்லையோ என்றார். கேள்வியை எழுப்பியதே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்தான். அவர் கேள்வியை மட்டும் கேட்டிருக்க வேண்டும். புதிய வடிவமைப்பாளர்கள் நியமனம் செய்ய வேண்டும், தங்கள்

2016 பிப்ரவரி 17]

பகுதி வளர்ச்சி பெற வேண்டும் என்ற கோரிக்கையை மட்டும் அவர் வைத்திருந்தால் நானும் அதற்குத் தகுந்தாற்போல் பதிலைச் சொல்லியிருப்பேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் தேவையில்லாமல் பேசியது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்தான். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சந்திரகுமார், உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள். மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதுமாக எந்தெந்தப் பெயரிலே கூட்டுறவு அமைப்புகளும் நெசவாளர் சங்கங்களும் இருந்ததோ, அந்தந்தப் பெயரிலேதான் எந்த மாற்றமும் இல்லாமல் தமிழகம் முழுவதுமாக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி தொகுதிக்கு உட்பட்ட 5 பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 4,063 உறுப்பினர்களுடன் இயங்கி வருகின்றன. இங்கு 5 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பிற்கு பட்டுச்சேலைகள் உற்பத்தி செய்யப்பட்டு, 7 கோடியே 52 இலட்சம் ரூபாய் அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. ஆரணியில் உள்ள இச்சங்கங்களுக்குத் தேசிய வடிவமைப்புப் பயிற்சியை சென்னை மூலமாக 50 புதிய வடிவமைப்புகள் பெறப்பட்டு, 412 சேலைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்தப் பதிலைச் சொல்கின்றேன். கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் கணினி வடிவமைப்பு மூலமாக 69 புதிய வடிவமைப்புகள் பெறப்பட்டு, 387 சேலைகள் ஆரணி பகுதியில் புதிய வடிவமைப்புடன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. அதேபோல, ஆரணி பகுதியைச் சேர்ந்த கொருக்காத்தூர் அறிஞர் அண்ணா பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து, 25 நெசவாளர்கள் சென்னைக்கு அழைத்து வரப்பட்டு, 30 நாட்கள் கணினி வடிவமைப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு, நெசவாளர்கள் பெரும் அளவில் பயனடைந்து வருகின்றனர் என்பதையும், அவர்களுடைய புதிய வடிவமைப்புகளை கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் மூலமாக சந்தைப்படுத்துவதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மிகச் சிறப்பாகச் செய்து வருகின்றது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே உள்ள பட்டு

நெசவாளர்கள் மட்டுமல்ல, காஞ்சிபுரம் மற்றும் தமிழகம் முழுவதும் உள்ள பட்டு நெசவாளர்களுடைய உற்பத்திகள் தேங்கி இருக்கின்றன என்பதை அறிந்த மாண்புமிகு அம்மா அவர்கள் விதி எண் 110—ன்கீழ் கோ—ஆப்டெக்ஸ் மட்டுமல்ல, சங்கங்களும் 15 சதவீதம் தள்ளுபடியிலே விற்பனை செய்ய வேண்டும், அந்த விற்பனையிலே தள்ளுபடியினால் ஏற்படும் இழப்பை அரசே ஏற்றுக்கொண்டு அந்தச் சங்கங்களுக்கு பலனை அளிக்கும் என்ற நோக்கத்தில் ரூ.10 கோடியை ஒதுக்கிக் கொடுத்தது அந்தப் பட்டு நெசவாளர்களுடைய வாழ்க்கையையே வளம் பெறச் செய்தது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) திரு. பாபு முருகவேல் அவர்கள் ஒரு வழக்கறிஞர். இவையெல்லாவற்றையும் தெரிந்துகொண்டு, அரசைக் குற்றஞ்சாட்டுவதை விட்டுவிட்டு கோரிக்கைகள், தேவைகள் என்ன என்பதைக் கேட்டால், நாங்களும் அமைதியாக பதில் சொல்வதற்கு எங்களுக்கும் அந்தச் சூழல் ஏற்படும். குற்றஞ்சாட்டுவதும், அதைக் கண்டுகொள்ளவில்லையா, இதைக் கண்டுகொள்ளவில்லையா என்பதை நீங்கள் கேட்டால், மாண்புமிகு அம்மா அவர்கள் அருதிப் பெரும்பான்மையிலே வெற்றி பெற்ற அரசு எவ்வளவு authoritative—ஆக நாங்களும் பதில் சொல்வோம் என்பதை இந்த நேரத்திலே நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்து ஆண்டுகளாக நாங்கள் மாற்றவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவருக்கு நினைவூட்டல். ஒன்று, இந்த இரண்டு சங்கங்களும் ஏறத்தாழ 40 ஆண்டுகளாக இயங்கிக்கொண்டிருக்கின்றன. இரண்டு, ** (குறுக்கீடு)

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. நீங்கள் குற்றச்சாட்டு எதையும் சொல்லக் கூடாது. கேள்வி நேரத்தில் இது தேவையில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2016 பிப்ரவரி 17]

வேண்டாம். கேள்வி நேரத்தில் நீங்கள் குற்றச்சாட்டு சொல்லிக்கொண்டிருக்கின்றீர்கள். இது சரியில்லை, திரு. பாபு முருகவேல், நீங்கள் உட்காருங்கள். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

வினா வரிசை எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

55—

விளையாட்டரங்கம்

***63120 திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதியில் விளையாட்டரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேலூர் தொகுதியில் விளையாட்டு அரங்கம் அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, கட்சியில் பல்வேறு உயர் பதவிகள் கொடுத்து அழகுபார்த்து, தொடர்ந்து மூன்று முறை நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பளித்து, மூன்று முறையும் வெற்றி பெறுவதற்கு எனக்காக வந்து பிரச்சாரம் செய்து, வெற்றியைத் தேடிக் கொடுத்த, (மேசையைத் தட்டும் ஒலி) உலக அரசியல் வரலாற்றிலே ஒரே